ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1911/15 - 2015 අප්‍රේල් මස 24 වැනි සිකුරාදා - 2015.04.24
*1911/ 15 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (xiv)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

20 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் அலுவல்களின் நிர்வாகம் பாரதூரமாக சீர்குலைந்துள்ளதெனவும் அப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளனர் எனவும் திருப்திப்படுவதன் மேல், மேற்கூறப்பட்ட சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணைவிதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழ், சொல்லப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் முதல்வருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணியை முறையே பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக திருகோணமலை வளாகத்தின் முதல்வருக்கு பதிலாக 2015, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு பேராசிரியர் ரஞ்சித் பிரேமலால் டி சில்வா என்பவரை இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.*

சரத் அமுனுகம,
உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்.

கொழும்பு,
*2015, ஏப்பிறல் 21.*

*5 - 166*


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.